## முதியோர்களுக்கான தேசிய மன்றம் - 2019

---

## 1. அபிப்பிராயம்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறித்த நியமத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்களில் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் பூரணமாகத் தேய்மானமிடப்பட்ட ஆனால் மேலும் உபயோகத்திற்கேற்ற வகையில் காணப்படுகின்ற ரூபா 1,800,000 கிரயமான நிலையான சொத்துக்களில் ஏற்பட்ட மதிப்பீட்டு தவறு இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இக் கிரயத்துடன் மோட்டார் வாகனங்கள் பூரணமாகத் தேய்விடப்பட்டுள்ளதுடன் அதன் மீள் மதிப்பீட்டுத் தொகை மீண்டும் ஏடுகளில் எடுப்பதற்கு மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலங்களில் நிதிக் கூற்றுக்கள் மூலம் அத்தேய்மானம் தொடர்பான சீராக்கங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்கள் மற்றும் தேய்மானம் தொடர்பான கணக்குகள் தயாரிக்கும் போது பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றல் வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் அதற்கு முந்திய வருடங்களில் செயலக அலுவலகத்தினால் வருடாந்த முதியோர் நலன்புரி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட மற்றும் பிரதேசச் செயலக அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் முன்னைய வருடங்களின் செலவுகளாக அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குள் அம்முற்பணத் தொகையில் சேமிப்பாக ரூபா 2,615,078 ஆனது மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் இச் சேமிப்பானது செலவுகளுக்கு மீண்டும் சீராக்கப்படுவதற்காக முன்னைய வருட சீராக்கலாக திரட்டப்பட்ட மிகையின் சீராக்கத்திற்குப் பதிலாக செயலக அலுவலகங்களினால் அச் சேமிப்பு நடைமுறைப் பொறுப்பின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய மேலதிகக் கட்டணமாக (Surcharge receivable) காட்டப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் நடைமுறைப் பொறுப்பு அந்த பெறுமதியால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் காட்டப்பட்டதன் பிரகாரம் அந்த மிகுதிகள் முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களின் மூலம் திரட்டப்பட்ட மிகையில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சாட்சிகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கட்புல மற்றும் செவிப்புல உபகரணங்களை வழங்குதல் | 7,000,000 | மீளாய்வாண்டில் 60 வருடங்களுக்கு மேற்பட்ட குறைந்த வருமாணம் பெறுகின்ற முதியோர்களுக்க கட்புல மற்றும் செவிப்புல உபகரணங்கள் வழங்குவதற்காக சமூகப் பாதுகாப்பு நிதியில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19,000,000 ஆன தொகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 7,000,000 தொகை தேசிய சபையின் செலவாகக் கணக்கிடப்பட்டதுடன் ஆனால் அச் செலவுகளுக்குரிய பொருத்தமான ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 60 வருடங்களுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்காக கண்ணாடி வழங்கப்படுவதற்கு தேசிய சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் ரூபா 07 மில்லியன் ஆனது மாற்றுத் திறனாளிகளின் பொதுச் செயலகதற்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் சமூகப் பாதுகாப்பு நிதியத்தில் வேறு நிறுவனங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கங்கள் ஒதுக்கப்படாத போதிலும் செலவுகளுக்கான சாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க அரச வியாபாரச் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் 5.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கலாக ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் 2019 ஆம் வருடம் உள்ளடங்கலாக 3 வருடங்களுக்கான ஒருங்கிணைப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பவில்லை. | 3 வருடங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த திட்டமொன்று இற்றை வரையில் தயாரிக்கப்படாமையுடன் 2021 ஆம் வருடத்திலிருந்து ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | பொதுச் செயலகத்தின் நீண்டகாலத் திட்டங்களை உள்ளடக்கி ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 2,861,899 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,867,929 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,006,030 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு அரச மாணியங்களின் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 30 பிரதேச செயலக அலுவலகங்களினால் கழிக்கப்பட்டு பெறப்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு ரூபா 3,724,800 ஆனது முதியோர்களுக்கான செயலகத்திற்கு வழங்கப்படாததுடன் 1 வருடத்திற்கும் அதிகமான காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | இத்தொகை விரைவில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | கழிக்கப்பட்ட பணத்தைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய சபையின் சட்டத்தின் பிரகாரம் முதியோர்கள் தொடர்பான சரியான மற்றும் நாளது வரையாக்கப்பட்ட எண்ணிக்கைப் பதிவேடு பராமரிக்கப்பட்ட வேண்டியமை சபையின் ஒரு செயற்பாடு என்பதுடன் அதற்காக சரியான ஒரு முறைமையொன்று பராமரிக்கப்பட வேண்டுமென பொது முயற்சிக்கான குழு 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. முன்னைய வருடத்தில் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியில் ரூபா 2,000,000 ஆனது பெறப்பட்டு முறைமையை தயாரிப்பதற்கான அனுமதி பெறப்பட்டிருந்தும் ஆனால் 2020 நவம்பர் மாதம் வரையில் முதியோர் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு முறையான நாளது வரையாக்கப்பட்ட முறையொன்று காணப்படவில்லை. | தேசிய முதியோர் செயலகம் தொடர்பான முகாமைத்துவக் தகவல்கள் முறைமை இற்றைவரையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் முதியோர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுவதற்காக தனிப்பட்ட பதிவேடுகள் தற்போது வரையில் நாளது வரையாக்கப்பட்டு வருகின்றன. | முதியோர்கள் தொடர்பான சரியான மற்றும் நாளது வரையாக்கப்பட்ட முறைமை விரைவில் தயாரிக்கப்படல் வேண்டும் |

### 3.2 நிதி குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய முதியோர் செயலகத்தினால் 70 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் பெறுகின்ற முதியோர்களுக்காக வழங்கப்படுகின்ற ரூபா 2,000 கொடுப்பனவில் ரூபா 100 கழிக்கப்பட்டு வழங்கப்படுவதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அவ்வாறு கழிக்கப்பட்ட தொகை சேர்க்கப்பட்டு உயர்வடைந்த நிதியின் மிகுதி ரூபா 1,931,745,249 ஆகக் காணப்பட்டது. இந் நிதியம் 2016 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் செய்யப்பட வேண்டிய 10 செயற்பாடுகள் 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அச் செயற்பாடுகள் எதுவும் கடந்த 3 வருடங்களுக்குள் செயற்படுத்தப்படவில்லை. மீளாய்வாண்டினுள் முதியோர்களுக்கான 11 நலன்புரி செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 1,402,310,000 ஆன ஒதுக்கங்கள் மேற்கொள்ளபபட்டிருந்தது. செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந் நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 297,226,130 அதாவது நூற்றுக்கு 21 வீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந் நலன்புரிச் செயற்திட்டங்களைக் கெயற்படுத்துவதற்காக முதியோர்களுக்கான தேசிய சபையன் அனுமதி பெறப்பட்டமை மீளாய்வாண்டில் ஏப்ரல் 9 ஆம் திகதியில் நடாத்தப்பட்ட தேசிய சபையின் கூட்டத்திலேயே ஆகும். இதனால் வருடத்திற்காகத் திட்டமிடப்பட்டிருந்த நலன்புரிச் செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைய முடியாமல் போய்விட்டது. | திட்டமிடப்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | குறைந்த வருமானம் பெறும் 60 வயதுக்கு மேற்பட்ட 662 முதியோர்களுக்காக ரூா 20,000 வீதம் சுய தொழில் நிவாரணத் தொகை வழங்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 13,240,000 இல் ரூபா 2,293,307 ஆனது பயன்படுத்தப்படவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் தீவு முழுவதிலும் | சுயதொழில் நிவாரணக் கோரிக்கைகளின் பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் சமூகப் பாதுகாப்பு நிதியத்தினால் உத்தேசிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தது. அதில் 175 முதியோர் பராமாகப்பு மத்திய நிலையங்கள் கட்டுதல் மற்றும் திருத்த அமைத்தல் என்பவற்றுக்காக மாவட்ட | வருடத்திற்காக குறிப்பிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கோரிக்கைகள் சம்பந்தமாகக் கவனம் கோரப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 175 முதியோர் பராமரிப்பு மத்திய நிலையங்கள் புதிதாக காட்டப்படுவதற்கோ அல்லது திருத்தியமைப்பதற்காக மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கப்படுவதற்காக ரூபா 437,500,000 ஆன ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 366,577,802 அதாவது நூற்றுக்கு 84 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | மட்டத்தில் பெறப்பட்ட அளவு கோல்கள் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கைகளுக்காக மட்டுமே பணம் விடுவிக்கப்பட்டமை காட்டப்பட்டிருந்தது. | |
| (இ) | வயது 75 வருடங்களான சிரேஷ்ட குடிமக்களுக்கு வைத்தியக் காப்புறுதி முறைமையொன்றை உருவாக்குதல் மற்றும் 65 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோர்களுக்காக பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்று தயாரித்தல் 2016 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக வழங்கப்டப்டிரந்த ரூபா 5,000,000 இல் முதியோர் செயலகத்தில் மற்றும் 331 பிரதேசச் செயலகங்களுக்கு அறிவூட்டல் செயலமர்வுகள் தொடர்பாக 2016 ஆம் வருடத்தில் ரூபா 3,305,836 செலவிடப்பட்டிருந்ததுடன் சேமிப்பான ரூபா 1,694,164 ஆனது நாணாவித வைப்புக் கணக்கில் 2020 நவம்பர் 17 ஆந் திகதி வரையில் தக்க வைக்கப்பட்டிருந்தது. இக் கொள்கைப் பிரகடனம் தயாரிப்பதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2020 நவம்பர் 17 ஆந் திகதி வரையில் 4 வருடங்களிற்கும் அதிகமான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் ஆனால் அப்பிரகடனம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முதியோர்களுக்கான தேசியக் கொள்கைக்காக இற்றை வரையில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அடுத்த படியாக கெசட் பண்ணுவதற்குத் தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது. | இக் கொள்கை தயாரிப்பதற்கு 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கபட்டிருந்தமையால் விரைவில் முடிப்பதற்காகத் திட்டமிடல் வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய கட்டிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முதியோர் இல்லங்கள் கட்டுவதற்காக 2011 ஆம் வருடத்தில் பரிசு உறுதிப்பத்திரத்தின் மூலம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 13,000,000 என்பதுடன் கம்பஹா ஹொலிக்ரொஸ் காணி மற்றும் ரூபா 3,200,000 ஆன விஹாரகம ராஜிதவத்த ஆகிய காணிகளுக்கான செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு இயலாமை காரணத்தினால் விளைவற்றதாகக் காணப்பட்டன | காணி மாற்றப்பட்ட பின்னர் கம்பஹா ஹொலிக்ரொஸ் காணிக்குரிய பூரண திட்டமொன்று இல்லாமையுடன் எதிர்காலத்தில் காணிகள் கைப்பற்றல் பணியில் இறங்குவதற்கு முன் அந்தக் காணி தொடர்பான பூரண திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு பொருத்தமான அளவையாளரிடமிருந்து இதற்கான விலை மனுக்கள் கோரப்பட உள்ளன. | செயலகத்திற்கு வழங்கப்பட்ட காணியால் நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி மற்றும் சட்ட அலுவலர் பதவி என்பன செயலகம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து வெற்றிடங்கள் காணப்பட்டு வருவதுடன் உதவிப்பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கான 2017 சனவரி 11 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் வரையில் அவ் வெற்றிடத்திற்காக அலுவலர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் 2011 சனவரி 31 ஆந் திகதி மற்றும் 2017 யூலை 06 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது. மேலும் இப்பதவிகள் பூரண காலப் பதவிகளாக குறிப்பிடப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைத்தளதிடம் கோரப்பட்டிருந்ததுடன் அதற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அப்பதவிகள் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்காக காலதாமதமின்றி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |